

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, திண்டுக்கல் மாவட்டம், கன்னிவாடி மு.ரெ.அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 24.08.2023 அன்று நடைபெற்ற விழாவில் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதி வண்டிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி பெ.திலகவதி, ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் சிவகுருசாமி, கன்னிவாடி பேரூராட்சித் தலைவர் திருமதி தனலட்சுமி சண்முகம், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அ.நாசருதீன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மலரவண், கிருஷ்ணன் உட்பட பலர் உள்ளனர்.



மதுரை ரயில் தீ விபத்தில் பாதிக்கப்பட்டு மதுரை இராசாசி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் சந்தித்து நலம் விசாரித்து ஆறுதல் கூறினார். உடன் மதுரை அரசு மருத்துவமனை டீன் ரத்தினவேல் மற்றும் அதிகாரிகள் உள்ளனர்

### சிவகங்கை மாவட்டத்தில் –

# முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்!

## கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தொடங்கி வைத்தார்!

சிவகங்கை, ஆக. 27 -

சிவகங்கை மாவட்டத்தில் திருப்பத்தூர் தொகுதி கண்ட வராயன் பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் காலை உணவு திட்டத்தினை துவக்கி வைத்து சிற ப்புரை யாற்றினார்.

நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் ஒன்றிய குழு தலைவர் எஸ். சண்முகவடிவேலு ,மாவட்ட திட்ட இயக்குனர் முனைவர் ராம்.சிவராமன் முதன்மைக் கல்வி அலுவலர் பாலுமுத்து, ஒன்றிய கவுன்சிலர் ஜெயபாரதி, ஊராட்சி ஒன்றிய தலைவர் அபிராமி காந்தி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார் ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் சோமசுந்தரம், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் சன் சீமான் சுப்பையா ஒன்றியத் துணைச் செயலாளர் முத்துக்குமார், உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

இந்த காலை உணவு திட்டத்தினை துவங்கி வைத்து கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் பேசியதாவது:-

தமிழக முதல்வரின் காலை உணவு திட்டம் இன்று தமிழகத்தில் அனைத்து அரசு துவக்க பள்ளிகளில் விரிவுப படுத்தப்படுகின்றது . சிவகங்கை மாவட்டத்தில் 946 பள்ளிகளில் இன்று முதல் இத்திட்டம் விரிவுபடுத்தப்படுகிறது. உள்ளது மாவட்டத்தில் 35 ஆயிரத்து 993 மாணவ மாணவிகள் காலை உணவு திட்டத்தில் பயன்பெறுகிறார்கள். இதற்காக ரூபாய் 2 கோடியே 64 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது .முன்பு நீதிக்கட்சி ஆட்சியில் சத்துணவு திட்டம் கொண்டுவரப் பட்டது. அதை பின்னர் காமராஜர் மதிய உணவு திட்டமாக கொண்டு வந்தார். தலைவர் கலைஞர் முதல்வராக பதவி ஏற்றதும் சத்துணவு திட்டத்தை முட்டையுடன் சேர்த்து சத்துணவு திட்டத்தை அறிமுகப்படுத்தினார். தற்பொழுது தமிழக முதல்வர் தளபதி அவர்கள் மதிய சத்துணவு திட்டத்துடன் குழந்தைகளின் பசியை போக்கும் வகையில் காலை உணவு திட்டத்தையும் செயல்படுத்தி உள்ளார். பல்வேறு நிதி நெருக்கடியில் இத்திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது. பெரும்பாலான வீட்டில் கிராமங்களில் காலையில் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பும் பொழுது உணவு தயாரித்து அனுப்ப முடியவில்லை. பசியுடன் வருகின்றார்கள் .இதனால் படிப்பில் போதிய கவனம் செலுத்த முடியவில்லை. எனவே பள்ளிக்குச் சென்று அவர்கள் நன்றாக படிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தமிழக முதல்வர் அவர்கள் இத்திட்டத்தினை துவங்கி உள்ளார்கள். எனவே பள்ளி மாணவ மாணவிகள் திட்டத்தில் பயன் பெற்று நன்றாகப் படித்திட வேண்டும்.

தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், சமையலர்கள் பள்ளி மாணவர்களுக்கு சுகாதாரமான சுத்தமான உணவு வழங்கிட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் பேசினார்.

**மானாமதுரை**

மானாமதுரை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல். ஏ. ஆலம்பச்சேரி யில் காலைஉணவு திட்டத்தினை துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ. சுப. மதி அரசன், ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி லதா அண்ணாத் துரை, ஒன்றியச் செயலாளர் எம். அண்ணா துரை புவியரசு அரசு உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

மானாமதுரை தாலுகா பெரிய கோட்டையில் மானாமதுரை ஒன்றியக் குழு துணைதலைவர் முத்துச்சாமி காலை உணவு திட்டத்தை துவக்கி வைத்தார்.

**திருப்புவனம்.**

திருப்புவனம் மேற்கு தெற்கு துவக்க பள்ளிகளில் பேரூராட்சி மன்ற தலைவர் த.சேங்கை மாறன் காலை உணவு திட்டத்தினை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார் .

இந்த நிகழ்ச்சியில் பேரூராட்சி செயல் அலுவலர் ஜெயராஜ், வட்டார கல்வி அலுவலர்கள் பாண்டி, பேரூராட்சி மன்றதுணைத் தலைவர் ரகுமத்துல்லா கான், கவுன்சிலர்கள் பாரதிதாசன், கண்ணன், வேல் பாண்டி, ராமலட்சுமி, பாலகிருஷ்ணன், பத்மாவதி, முத்துக்குமார், சித்ரா தேவி, ஆறுமுகம், அமிதா ,ஷேக் முகமது, பேரூர் கழகச் செயலாளர் நாகூர்கனி, அண்ணாமலை உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

**காரைக்குடி**

காரைக்குடி சங்கராபுரம் ஊராட்சி ஒன்றிய பள்ளியில் எஸ். மாங்குடி எம். எல்.ஏ. காலை உணவு திட்டத்தை துவக்கி வைத்தார் .இந்த நிகழ்ச்சியில் ஆணையாளர் சாந்தி மாவட்ட கவுன்சிலர். ராதா பாலசுப்பிரமணியன், ஊராட்சி மன்ற தலைவர் தேவி மாங்குடி, அரசு வழக்கறிஞர் பாலசுப்ரமணி யன் ,ஒன்றிய கவுன்சிலர்கள் சொக்கலிங்கம், செங்கோல், கணபதி, தெரசா, விவேக், காஞ்சனா, ஒன்றிய துணைச் செயலாளர் சத்யராஜா உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

**கல்லல் ஒன்றியம்**

விசாலயன் கோட்டையில் ஒன்றிய குழு தலைவர் திருமதி சொர்ணம் அசோகன் காலை உணவு திட்டத்தை துவக்கி வைத்தார் . இந்த நிகழ்ச்சியில் பொதுக் குழு உறுப்பினர் கரு. அசோகன், பொறியாளர் செல்லையா, ஊராட்சி மன்ற தலைவர் முருகேசன், தலைமை ஆசிரியர் ஆரோக்கியசாமி, ஆசிரியர் ராஜி உட்பட பலர் கலந்து கொண்டார்கள். கோட்டையூர் வள்ளியம்மை வேலங்குடி அரசு பள்ளியில் பேரூராட்சி மன்ற தலைவர் கார்த்திக் சோலை காலை உணவு திட்டத்தினை துவக்கி வைத்தார். செயல்அலுவலர் கவிதா, கவுன்சிலர்கள் ராமு, பானுமதி, சங்கீதா, பொன்னழகு,

திவ்யா, உட்பட பலர் கலந்து கொண்டார்கள். சிவகங்கை ஒன்றியம் காஞ்சிரங்கால் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி யில் ஊராட்சி மன்ற தலைவர் கே .எஸ். எம். மணிமுத்து காலை உணவு திட்ட த்தினை துவக்கி வைத்தார் .இந்த நிகழ்ச்சியில் மாவட்டபஞ்சா யத்து அலுவலர் வீரராகவன் ஆணையாளர் பத்மநாபன் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

### திருச்சி மாவட்டத்தில் ரோந்துப்பணியின் போது சாலைவிபத்து: உயிரிழந்த

# தலைமைக் காவலரின் குடும்பத்திற்கு ரூ.25 லட்சம் நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**நாகை, ஆக. 27 -**

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ரோந்து பணியின் போது ஏற்பட்ட சாலைவிபத்தில் உயிரிழந்த தலைமைக் காவலரின் குடும்பத்தினருக்கு மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறி நிதியுதவி அறிவித்துள்ளார்.**

முதல்வர் அவர்களின் அவ்வறிவிப்பு வருமாறு:-

திருச்சி மாநகர், அரியமங்கலம் போக்குவரத்து ஒழுங்குப் பிரிவில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த ஶ்ரீதர் (வயது 45) கடந்த 30.7.2023 அன்று அரிஸ்டோ இரயில்வே மேம்பாலத்தில் இரவு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது அவ்வழியாக வந்த கார் ஒன்று மோதியதில் காயமுற்று அருகிலுள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அங்கு அவர் அன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது ஏற்பட்ட விபத்தில் தலைமைக் காவலர் ஶ்ரீதர் உயிரிழந்திருப்பது காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஒரு பேரிழப்பாகும்.

தலைமைக் காவலர் ஶ்ரீதர் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்வதோடு அவரது குடும்பத்தினருக்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### மதுரை ரயில் நிலையத்தில் சுற்றுலா ரயில் பெட்டியில் தீ விபத்து:

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு - தலா ரூ.3 லட்சம் நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

நாகை, ஆக. 27 -

மதுரைஇரயில்நிலையத்தில் சுற்றுலா இரயில் பெட்டியில் ஏற்பட்ட தீவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறி, தலா ரூ.3 லட்சம் நிதியுதவி அறிவித்துள்ளார்.

முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

உத்திரப் பிரதேச மாநிலம் சித்தூரிலிருந்து இராமேஸ்வரத்திற்கு வந்த ஆன்மீக சிறப்பு சுற்றுலா இரயிலில் நாகர்கோவில் ரயில் நிலையத்திலிருந்து கூடுதலாக பெட்டிகள் இணைக்கப்பட்டு மதுரை இரயில் நிலையத்தில் நேற்று (26.8.2023) அதிகாலை நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் அதில் பயணித்த பயணிகள் சமையல் செய்துகொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக ஏற்பட்ட தீ விபத்தில் ஒன்பது பேர் உயிரிழந்தனர் என்ற வேதனையான செய்தியினைக் கேட்டு மிகுந்த வருத்தமுற்றேன்.

மதுரை மாவட்ட ஆட்சியரை உடனடியாக விபத்து நடந்த இடத்திற்குச் சென்று உரிய மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும், காயமடைந்தவர்களுக்கு மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சை சிறப்பு சிகிச்சை அளிக்கவும் அறிவுறுத்தியுள்ளேன்.

உயிரிழந்தவர்களின் உடல்களை அவர்களது சொந்த ஊர்களுக்குக் கொண்டுசெல்ல தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.


உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்வதோடு அவர்களது குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

மேலும், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி. மூர்த்தி, தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் ஆகியோரை சம்பவ இடத்திற்கு நேரில் சென்று தேவையான உதவிகளை செய்திடுமாறும் கேட்டுக்கொண்டேன்.

இவ்வாறு அவ்வறிவிப்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### என்.ஆர். ராமதாஸ்
### ஆகஸ்ட் 27 (2016)



**இளமைக் காலம் தொட்டே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியதோடு, முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து இராசிபுரம் நகரக் கழகச் செயலாளராகப் பொறுப்பு வகித்து கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.**

**இராசிபுரம் நகராட்சித் தலைவராக வெற்றி பெற்று, நகர மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர். சேலம் மாவட்ட பொன்னி கூட்டுறவு அங்காடி நிர்வாக உறுப்பினராகவும் பதவி வகித்தவர்.**

**1962–ல் விலைவாசி எதிர்ப்புப் போராட்டம் – 1964–ல் சட்ட எதிர்ப்புப் போராட்டம் – இலங்கைத்தமிழர் ஆதரவுப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தனது வாழ்நாள் முழுவதும் மிதிவண்டியிலேயே சென்று கழகப் பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### நெல்லை மாவட்டத்தில் சாலை விபத்தில் பலியான தனியார் தொலைக்காட்சி ஒளிப்பதிவாளர்

# சங்கர் குடும்பத்திற்கு ரூ.5 லட்சம் நிவாரண நிதி!

## கோட்டாட்சியர் கார்த்தியாயினி வழங்கி ஆறுதல் கூறினார்!

நெல்லை, ஆக.27 -

நெல்லை மாவட்டத்தில் சாலை விபத்தில் தனியார் தொலைக்காட்சி ஒளிப்பதிவாளர் சங்கர் (வயது 33) உயிரிழந்தார்.மற்றும் 3 பேர்கள் காயம் அடைந்தனர்.இது பற்றிய துயரமான தகவல் அறிந்ததும் தமிழ்நாடு முதல மைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இளம் வயதில் உயிரிழந்த தொலைக்காட்சி ஒளிப்பதிவாளர் சங்கர் அவர்களது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும்,ஆழ்ந்த இரங்கலையும்,ஆறுதலையும் தெரிவித்ததோடு,முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியி லிருந்து விபத்தில் உயிரிழந்த ஒளிப்பதிவாளர் சங்கர் குடும்பத்திற்கு ரூபாய் 5 லட்சமும், படுகாயம் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் செய்தியாளர் நாகராஜன், ஒளிப்பதிவாளர்கள் நாராயணமூர்த்தி, வள்ளிநாயகம், ஆகியோருக்கு தலா ரூபாய் 50,000 ம் வழங்க உத்தரவிட்டார் கள்.

அதன்படி விபத்தில் உயிரிழந்த ஒளிப்பதிவாளர் சங்கர் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 5 லட்சத்துக்கான காசோலையை நெல்லை கோட்டாட்சியர் கார்த்தியாயினி வழங்கி ஆறுதல் கூறினார்.அதனைத் தொடர்ந்து நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி பல்நோக்கு மருத்துமனை சிகிச்சை பெற்று வரும் செய்தியாளர் நாகராஜன், ஒளிப்பதிவாளர்கள் நாராயணமூர்த்தி, வள்ளிநாயகம் ஆகியோருக்கு தலா ரூபாய் 50,000,ம் காசோலையை வழங்கி அவர்களுக்கும் ஆறுதல் கூறினார். உடன் பாளையங்கோட்டை வட்டாட்சியர் சரவணன் உள்பட பலர் சென்றனர்.



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காலை உணவுத்திட்டத்தை துவக்கி வைத்ததை தொடர்ந்து மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகிலுள்ள பி.அம்மாபட்டி கிராமத்தில் அரசு பள்ளியில் மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் காலை உணவு திட்ட துவக்க விழாவில் பங்கேற்று பள்ளிச் சிறுவர்களுக்கு உணவு ஊட்டிய போது எடுத்தபடம். இந்நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் ஆலம்பட்டி சண்முகம், கொ.தனபாண்டியன், மாவட்ட கவுன்சிலர் ஜெயராஜ், கிளை செயலாளர் காந்தி மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.